# கோவையில்

# உலக டூஷின் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு!

## மருத்துவ கல்லூரி டீன் பங்கேற்பு!!

கோவை,செப்.10—

கோவையில் உலக டூஷின் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தின விழா நிகழ்ச்சிகள் நேற்று மாலை நடைபெற்றது.

உலகளவில் டூஷின்தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தினம் நேற்று மாலை கடைபிடிக்கப்பட்டது.அதையொட்டி மரபணு பரிசோதனை,கலந்தாய்வு, பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் சுமார் 50க்கும் மேற்பட்ட டூஷின் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட அகுழந்தைகளுக்கு ஒரு சிறப்பு நிகழ்ச்சியை பீளமேடு ஜென்னீஸ் கிளப் புல் வெளி அரங்கில் ஏற்பாடு செய்திருந்தது.

இவ்விழாவில் கோவை அரசு மருத்துவக் கல்லூரி டீன் டாக்டர் அசோகன் தலைமை தாங்கினார். ராயல்கேர் உயர் சிறப்பு மருத்துவமனை சேர்மன் டாக்டர் மாதேஸ்வரன் கவுரவ விருந்தினராக கலந்து கொண்டார். நோபல்ப வுண்டேஷன் நிறுவன அறங்காவலர் ரமேஷ் அந்தோணி சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்பித்தார்.

தொடர்ந்து எம்டிசிஆர்சி தன்னார்ன நிறுவனர் டாக்டர் பி.ஆர். லட்சுமி அனைவரையும் வரவேற்று பேசினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறயதாவது;

உலகம் முழுவதும் 3500 குழந்தைகளில் ஒருஆண் குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுகிறது. இந்நோய் மரபு வழி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் இந்நோய்க்கு மருந்து இன்றளவிலும் கணட்றியப்படவில்லை.நாம் கற்ற அறிவியல் சமுதாயத்தை சென்றதடவதே எம்சிடிசிஆர்சி –ன் நோக்கமாகும். டூஷின் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்ப த்திற்காக 12 ஆண்டுகளாக . சேவையாற்றி வருகிறது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்டவாறு டாக்டர் லட்சுமி கூறினார். முன்னதாக டூஷின் குழந்தைகள் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. கீதாஞ்சலி பள்ளி மாணவியர்கள் பரத நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றது. குழந்த்கைள் பட்டங்கள், மற்றும் பலூன்களை சேர்த்து பறக்க விட்டும் மகிழ்ந்தனர், குழந்தைகளின ஆடல் பாடல் நிகழ்ச்சியில் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.